Persatuan Pengguna Pulau Pinang
Consumers Association of Penang
槟城消费人协会 பினாங்கு பயனீட்டாளர் சங்கம்
10 Jalan Masjid Negeri, 11600 Pulau Pinang, Malaysia
Tel: 604-8299511 Fax: 604-8298109
email: consumerofpenang@gmail.com
Websites
Bahasa: www.pengguna.org.my
English: www.consumer.org.my
Chinese: www.cap.org.my

பத்திரிகைச்செய்தி 11.11.2020

# சிலாங்கூரில் மோசமாகிக் கொண்டு வரும் தண்ணீர் பிரச்சனை நிறுத்தப்பட வேண்டும் பினாங்கு பயனீட்டாளர் சங்கம் வேண்டுகோள்

தண்ணீர்க் குழாய்கள் உடைந்துபோவது, பராமரிப்பு, பழுது பார்க்கும் வேலைகள், தண்ணீர் தூய்மைக்கேடு ஆகியவை தொடர்ச்சியாக சிலாங்கூர் மக்களுக்குத் தண்ணீர் தட்டுப்பாட்டினை உருவாக்கி வருவதால் அந்தப் பிரச்சனைகள் விரைவில் களையப்பட வேண்டும் என்று பினாங்கு பயனீட்டாளர் சங்கத் தலைவர் முகைதீன் அப்துல் காதீர் வேண்டுகோள் விடுத்தார்.

இது போன்ற அவல நிலை தொடராமல் இருக்க சிலாங்கூர் உள்ளூர் தரப்பு, மாவட்ட அலுவலகம், வடிகால் மற்றும் நீர்ப்பாசன இலாகா, சிலாங்கூரின் தண்ணீர் நிர்வாக தரப்பு, சுற்றுச்சூழல் இலாகா, சிலாங்கூர் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் தண்ணீர் அமைச்சு ஆகியவை இணைந்து இந்தப் பிரச்சனையைக் களைய வேண்டும்.

தொழிற்சாலைகள், தொழிற்பட்டறைகளை, பாதுகாக்கப்பட்ட ஆறு மற்றும் இடை மண்டலப் பகுதிகளிலிருந்து அகற்றி வேறு இடங்களில் நிறுவ வேண்டும். தொழிற்சாலைகள் அவற்றுக்கென நிர்ணயிக்கப்பட்ட இடங்களில் மட்டுமே அமைக்கப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட அரசாங்க நிறுவனங்கள் தொழிற்சாலையின் கழிவுகள் முறையாக அகற்றப்படுகின்றனவா என்று கண்காணிக்க வேண்டும்.

வலுத்த அபராதம் மற்றும் சிறைத்தண்டனை ஆகியவற்றைக் கட்டாயமாக்கும் நோக்கில் சுற்றுச்சூழல் தர சட்டம் மறு ஆய்வு செய்யப்பட வேண்டியது அவசியமாகும். ஏனெனில் இப்போதுள்ள சட்டத்தின்படி தொழிற்சாலை உரிமையாளர்கள் எளிதில் அபராதத்தைச் செலுத்தி விட்டு சட்டத்தின் பிடியிலிருந்து நழுவி விடுகிறார்கள் என்று பினாங்கு பயனீட்டாளர் சங்கத் தலைவர் முகைதீன் அப்துல் காதீர் கூறினார்.

முகைதீன் அப்துல் காதீர்
தலைவர்
பினாங்கு பயனீட்டாளர் சங்கம்